
**பீர் பூசா சேகோ திப்பி கறவைமாடு வளர்ப்பில் கைகொடுக்கும் மாற்றுத் தீவனங்கள்**



அடர்தீவனத்துக்கு மாற்றாக, குறைந்த விலையில் கிடைக்கும் 'பீர் பூசா' மற்றும் 'சேகோ திப்பி' ஆகியவற்றைப் பயன்படுத்தி செலவைக் குறைத்து, அதிக வருமானம் பார்த்து வருகின்றனர்  விவசாயிகள் சிலர். அவர்களில் ஒருவரான திருவண்ணாமலை மாவட்டம், போளூர், நடராஜனின் அனுபவம்.

"ஆரம்பத்திலிருந்தே பால் பண்ணை வைக்கணும்கிறதுதான் என்னோட எண்ணம். முதல்ல எட்டு கறவை மாடுகளை வளர்த்து, பால் கறந்து வியாபாரம். பார்த்தேன. இடையில் சர்க்கரை ஆலைகள்ல மூட்டைப் பிடிச்சி அடுக்குற கான்ட்ராக்ட் கிடைக்கவும். ஆளுகள வெச்சு மாடுகள பராமரிச்சுகிட்டே, அந்த கான்ட்ராக்ட் வேலையையும் பார்த்தேன். இதுலயே போதுமான அளவுக்கு வருமானம் கிடைச்சாலும், பால் பண்ணை வெக்கணும்ங்கிற ஆசை மட்டும் குறையவே இல்ல. அதுக்காக சர்க்கரை ஆலைக்குப்பக்கத்திலேயே ஏழு ஏக்கர் நிலத்தை வாங்கி, பண்ணையை ஆரம்பித்தேன். நாலு ஏக்கர்ல கோ 4 தீவனப்புல், ஒண்ணரை ஏக்கர்ல வேலிமசால் போட்டது போக மீதி இடத்தை கொட்டகை மத்த பயன்பாடுனு  வெச்சுக்கிறேன்.

கிட்டத்தட்ட 12 வருஷமா இந்தத் தீவனங்களை மட்டும்தான் கொடுத்து வளர்த்துக்கிட்டு இருந்தேன். கூடவே அடர்தீவனங்களையும் கொடுத்தேன். அடர்தீவனத்துக்காகவே ஒரு மாட்டுக்கு சராசரியா ஒரு நாளைக்கு 120 முதல் 150 ரூபாய் வரை செலவாகும். இதைப் பத்தி கொஞ்சம் கவலையோடதான் பேசிக்கிட்டிருப்பேன்.

இந்தச் சூழ்நிலையிலதான், அதாவது ரெண்டு வருஷத்துக்கு முன்ன, நண்பர் ஒருத்தர், ‘பீர் பூசா’, ‘சேகோ திப்பி’ ரெண்டையும் மாடுகளுக்குத் தீவனமா கொடுத்தா செலவு குறையும்னு ஒரு யோசனை சொன்னார். பீர் கம்பெனியில் பயன்படுத்தப்படுற கோதுமையிலிருந்து கிடைக்குற கழிவுதான் ‘பீர் பூசா’. ஜவ்வரிசி தயாரிப்பு ஆலைகள்ல கிடைக்குற மரவள்ளிக் கிழங்கு கழிவுதான் ‘சேகோ திப்பி’ உடனடியா ரெண்டையம் வாங்கிட்டு வந்து பயன்படுத்த ஆரம்பிச்சேன். மாடுங்க விரும்பி சாப்பிடுதுங்க. இதைப் பயன்படுத்தின பிறகு, அடர் தீவனத்தோட செலவு பாதியா குறைஞ்சு போச்சு, அதிகபட்சம் 62 ரூபாய்தான் செலவாகுது” என்றார்.

**இப்படித்தான் கொடுக்கணும், பீர் பூசா**

‘பீர் பூசா’, ‘சேகோ திப்பி’ இரண்டையும் மாடுகளுக்குத் தீவனமாக நடராஜன் கொடுப்பது, கீழ்க்கண்ட முறைப்படித்தான்

கோ 4 தீவனப்புல் 25, கிலோ, வேலிமசால் 5 கிலோ கலந்து, அதை இரண்டாகப் பிரித்து காலை, மாலை இரண்டு வேளையும் ஒவ்வொரு மாட்டுக்கும் கொடுக்க வேண்டும். புல்லை அப்படியே போடாமல், சின்னச் சின்னத் துண்டுகளா வெட்டிக் கொடுத்தால், மாடுகள் கழிக்காமல் சாப்பிடும். அடர் தீவனத்துக்கு மாற்றாக, தினமும் இரண்டு வேளை ஐந்து கிலோ ‘பீர் பூசா’, ஐந்து கிலோ ‘சேகோ திப்பி, 30 கிராம் தாதுஉப்புக் கலவை

ஆகியவற்றுடன் தண்ணீர் கலந்து தொட்டியில் வைக்க வேண்டும். இதை மாடுகள் விரும்பி சாப்பிடும்.

கடலைப் பிண்ணாக்கு, எள்ளுப் பிண்ணாக்கு, ஊளுந்தம் பொட்டு, கோதுமைத் தவிடு என வழக்கமாகக் கொடுக்கும் தீவனங்களைத் தவிர்த்து விடலாம். ‘பீர் பூசா’ என்பது கோதுமைத் தோல்தான். எனவே, மாட்டுத் தனியா வைக்கோல் கூட வைக்கத் தேவையில்லை, என்பது நடராஜனின் அனுபவம்.

**மாதம் 45 ஆயிரம்:**

தொடர்ந்து பேசிய நடராஜன், “இப்ப 30 மாடு, பத்து கன்னுகுட்டி இருக்குது. இதுல, 15 மாடுக எப்பவும் கறவையில இருக்கும். மாட்டுக்கு சராசரியா 12 லிட்டர்னு வெச்சாலும், தினமும் 180 லிட்டர் பால் கிடைக்கும். லிட்டர் 20 ரூபாய்னு நேரடியா விற்பனை செஞ்சுடறேன். விற்பனை மூலமா 3,600 ரூபாய் வருமானம் கிடைக்குது. தீவனம், ஆள் கூலினு 2,100 ரூபாய் செலவு போக, தினம் 1,500 ரூபாய் மிச்சமாகுது மாசத்துக்கு 45,000 ரூபாய்.

இப்ப 10 கிடேரி கன்னுக்குட்டிங்க இருக்குது. இதெல்லாம் அடுத்த 18 மாசத்துல தயாராகிடும். இப்படி ஒவ்வொரு வருஷமும் கிடைக்குற கன்னுகள பெருக்கினா 2ம் வருஷத்துல நாம போட்ட முதலீட்டை வட்டியோட எடுத்துடலாம்” என்று நம்பிக்கையோடு சொன்னவர், ஆடு மற்றும் கோழிகள் பற்றிய வருமான விவரங்களையும் பகிர்ந்தார்.

**35 ஆடு ஆண்டுக்கு ஒரு லட்சம்:**

‘மாடுகள் வாங்கினப்பவே, நாட்டு இன ஆடுகள் மூணு வாங்கிவிட்டேன். நாலு வருஷத்துல 50 ஆடுகளா பெருகுச்சு. அதுல, 15 கிடாயை மட்டும் 75 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செஞ்சேன். இப்ப, 35 ஆடுகளும், ரெண்டு கிடாவும் நிக்குது. ஒரு ஆடு, ரெண்டு வருஷத்துல மூணு தடவை குட்டி போடும். ஆக ஆறு குட்டி வரைக்கும் போடும். ஆக ஆறு குட்டி வரைக்கும் போடும். அதிகபட்சம் எட்டு மாசம் வளர்த்து வித்தா, குறைஞ்சபட்சம் ரெண்டாயிரம் ரூபா விலை போகும். 35 ஆடுகள்ல இருந்து வருஷத்துக்கு குறைஞ்சபட்சம் 50 குட்டிக கிடைக்கும். எட்டு மாசம் கழிச்சு, குட்டி 2,000 ரூபாய்னு வித்தா வருஷத்துக்கு 1 லட்ச ரூபாய் கிடைக்கும்.

ஒவ்வொரு ஆட்டுக்கும் தினமும் நாலு கிலோ கோ 4 தீவனம், ஒரு கிலோ வேலிமசால் ரெண்டையம் கலந்து கொடுக்கணும். அதோடு, ஒரு கிலோ பீர் பூசா, ஒரு கிலோ சேகோ திப்பி ரெண்டையும் சேர்த்துக் கொடுத்தாலே போதும். மாடுகளுக்காக விளையிற பசுந்தீவனத்தையே ஆடுகளுக்கும் கொடுக்கறதால இதுக்குனு தனிச் செலவு கிடையாது.

**கோழியில் குபீர் வருமானம்:**

எங்க வீட்டுக்காரம்மா ஆசைப்பட்டாங்களேனு நாட்டுக்கோழிகள் ரெண்டு வாங்கிவிட்டேன். இரண்டு வருஷத்துலயே கிட்டதட்ட 120 கோழிக கிடைச்சுது. அதுல 40 சேவலை தலா 300 ரூபாய்னு மொத்தம் 12,000 ரூபாயிக்கு வித்துட்டேன். மீதி 65 பெட்டை கோழி, 15 சேவல் நிக்குது. ஒரு கோழி,

| அடர்தீவனம், மாற்றுத் தீவனச் செலவு, ஓர் ஒப்பீடு ரூபாயில் | |
|---|---|
| **அடர்தீவனம்** | |
| **விவரம்** | **செலவு** |
| அரிசித் தவிடு 5 கிலோ X 6 | 30 |
| கடலைப் பிண்ணாக்கு 1 கிலோ | 35 |
| கேழ்வரகு, கம்பு, மக்காச்சோளம், அரிசிக் குருணை 4 கிலோ X 15 | 60 |
| உளுந்தம் பொட்டு, துவரம் பொட்டு, கடலைப் பொட்டு, கோதுமைத் தவிடு தலா அரைக்கிலோ | 25 |
| தாது உப்பு மினரல் மிக்சர் | 2 |
| மொத்தம் | 152 |
| மாற்றுத் தீவனம் | |
| **விவரம்** | **செலவு** |
| பீர் பூசா 10 கிலோ X 4 | 40 |
| சேகோ திப்பி 10 கிலோ X2 | 20 |
| தாது உப்பு | 2 |
| மொத்தம் | 62 |

வருஷத்துக்கு எண்பது முட்டைகள் வரை போடும். நாங்க, அடைச்சு வைக்கிறது கிடையாது. மரத்துல அடையுறதால 50 முட்டைகதான் கிடைக்குது. 65 கோழிங்க மூலமா வருஷத்துக்கு 3,250 முட்டைகள் கிடைக்கும். இதுல சமார் 3,000 முட்டைகளை ஏழு ரூபாய் வீதம் விற்பனை செஞ்சிடுவேன். இதன் மூலமா, 21,000 ரூபாய் கிடைக்கும். மீதமுள்ள முட்டைகளை அடைவெச்சு குஞ்சுகள உற்பத்தி செய்வேன். இப்படியே சுழற்சி முறையில செய்துகிட்டே இருப்பேன். தோட்டத்துல கிடைக்கிற கழிவுகள், சாணியில இருந்து உற்பத்தி ஆகுற புழு, பூச்சிகளைச் சாப்பிட்டே கோழிங்க வளர்ந்துடறதால அதுங்களுக்கும் தீவனச் செலவு இல்ல.

சாணம், மாட்டுச் சிறுநீர் ரெண்டையும் குழாய் மூலமா குழிக்குக் கொண்டுபோய் சேகரிச்சி தீவனப்பயிர், மத்த விவசாயம் இதுக்கெல்லாம் உரமா பயன்படுத்திட்டு வர்றேன்.

மொத்தத்துல அஞ்சு ஏக்கர் தோட்டத்துல, மாடு, ஆடு, கோழினு வளர்த்தா மனசுக்கு நிறைவான வருமானத்தைக் கட்டாயம் பாக்கலாம்"

**தொடர்புக்கு**

நடராஜன்,

திருவண்ணாமலை மாவட்டம்,

போளூர் அலைபேசி : 97873-71972

---

**ஆதாரம்:** பசுமை விகடன் வெளியீடு 10.06.11 www.vikatan.com